# 2016 ஜூலை 08ஆந் திகதியின் சபை அலுவல்கள்

**திகதி :** 2016-07-08

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

## சபாநாயகரின் அறிவித்தல்கள்

'A' : அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம்

பின்வரும் குழுக்களுக்கு பிரதியிடப்பட்ட உறுப்பினர்களை தெரிவுக்குழு நியமித்துள்ளது-

'B' : வலுசக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
'C' : உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

'D' : அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் பணியாற்றவுள்ள பிரதியீட்டு உறுப்பினர்

## பத்திரங்கள் சமர்ப்பித்தல்

(i) 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய திட்டமிடல் திணைக்களம்
(ii) 2015 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

ஆகியவற்றின் செயலாற்றுகை அறிக்கைகள்

(iii) 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
(iv) 2013 - 2014 ஆம் ஆண்டுக்கான கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

ஆகியவற்றின் ஆண்டறிக்கைகள்

## குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

(i) சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(ii) சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

ஆகியவற்றின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

## மனுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களினால் பொதுமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன:-

(i) கௌரவ சுசந்த புஞ்சிநிலமே - எட்டு மனுக்கள்
(ii) கௌரவ நிஹால் கலப்பத்தி - ஆறு மனுக்கள்
(iii) கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி - ஐந்து மனுக்கள்
(iv) கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன - இரண்டு மனுக்கள்

(v) கௌரவ புத்திக பத்திறண - எட்டு மனுக்கள்

(மனுக்கள் பொதுமனுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்)

**நிலையியற் கட்டளை 23(2) இன் கீழான வினாக்கள்**

(i) கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள்

அன்பளிப்புச் செய்யப்பட்ட பேரீத்தம் பழங்களுக்கான வரி

(ii) கௌரவ அநுர திசாநாயக்க அவர்கள்

திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் விற்பனை

**அமைச்சு சம்பந்தப்பட்ட கூற்றுக்கள்**

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் கௌரவ றிஸாட் பதியுதீன் அவர்கள், அத்தியவசிய பொருட்களின் விலைகள் தொடர்பாக சபையில் கூற்றினை முன்வைத்தார்.

**சட்டமூலங்கள் சமர்ப்பணம்**

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்காக

**"சேர்பெறுமதி வரி (திருத்தம்)"**

எனும் சட்டமூலத்தினை நிதி அமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்க அவர்கள் பிரேரித்தார்.

**இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்**

(இன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் 150 முதல் 152 வரையான விடயங்களாகக் காணப்படும்) பின்வரும் விடயங்கள் சபையால் நிறைவேற்றப்பட்டன:-

**(i) குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி**
**(ii) நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்**
**(iii) மத்தியஸ்த சபை (திருத்தச்) சட்டமூலம்**

அதனையடுத்து, 1725 மணியளவில் பாராளுமன்றம் 2016 ஜூலை 20ஆந் திகதி புதன்கிழமை 1300 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

* இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.